ஆணையர் அலுவலகம்
இந்து சமய அறநிலையத்துறை
சென்னை–34.

ந.க.எண்.45344/2015/அ1, நாள்.09.10.2015

பொருள்: நீதிப்பேராணை மனு WP(MD) எண்.13615/2015 – உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை – மனுதாரர் திரு.ஏ.ஜி.சந்திரமோகன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டது – மனுதாரரின் மனு மீது உரிய நடவடிக்கை எடுத்து உத்தரவு பிறப்பித்திடக் கோருதல் – அருள்மிகு அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்கள் – வடலூர், குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர் மாவட்டம் – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை நீதிப்பேராணை மனு WP(MD) எண்.13615/2015, நாள் 28.07.2015.
2. மனுதாரர் திரு.ஏ.ஜி.சந்திரமோகன் ஆணையர் முன்பாக அளித்துள்ள எழுத்து மூலமான வாதுரை நாள் 14.9.2015
3. மனுதாரர் திரு.ஏ.ஜி.சந்திரமோகன் விசாரணையின்போது எழுத்துமூலம் வாக்குமூலம் நாள் 14.9.2015
4. இணை ஆணையர், விழுப்புரம் ந.க.எண் 6566/2015/ஆ2 நாள் 21.9.2015.

----

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர், அருள்மிகு அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம் இந்து சமய அறநிலையங்கள் சட்டப்பிரிவு 46(iii)ன் கீழ் பட்டியலில் பிரசுரம் செய்யப்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிர்வாகம் முதல் நிலை செயல் அலுவலராலும், ஐந்து பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் அடங்கிய அறங்காவலர் குழுவினாலும் நிர்வகிக்கப்பட வேண்டும் என்று கோவை துணை ஆணையர் ஓ.ஏ.எண் 68/1953 நாள் 28.9.1953 உத்தரவின்படி நிர்வாகத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது கடலூர் உதவி ஆணையர் மேற்படி திருக்கோயிலின் தக்காராக உள்ளார்.

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை முன்பாக W.P (MD) No: 13615/2015 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவில், இந்துசமய அறநிலையத்துறையின் ஆணையர் மற்றும் இத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் ஆகியோரை மட்டும் எதிர்மனுதாரராகக் கொண்டு, திரு.A.G.சந்திரமோகன் த/பெ. குருசாமி என்பவர் தாக்கல் செய்த மனுவில், கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர் நகரில் இயங்கி வருகின்ற, திருஅருட்பிரகாச வள்ளலார் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட "சத்திய ஞானசபை" எனும் அறநிறுவனத்தினை ("வள்ளலார் தெய்வ நிலையம்" என இத்துறையால் வழங்கப்பெறுவது) நிர்வகிப்பது குறித்து தனது 10.07.2015 தேதியிட்ட கடிதத்தில், 3 கோரிக்கைகளை வைத்ததாகவும், அக்கோரிக்கைகள் குறித்து எவ்வித பதிலும் தமக்கு

www.atruegod.org

Scanned with CamScanner

தெரிவிக்கப்படவில்லை என்றும், அது தொடர்பாக, எதிர் மனுதாரர்களை தக்க ஆணையோ, உத்திரவோ பிறப்பிக்குமாறும் "Mandamus" எனும் செயலுறுத்தாணை ரிட் மனு தாக்கல் செய்திருந்தார்.

28.07.2015 தேதியன்று இந்த ரிட் மனுவின் மீது தீர்ப்பு அளித்த மதுரை உயர்நீதிமன்றக் கிளை, மனுதாரரின் 10.07.2015 தேதிய கோரிக்கை மீது உத்திரவிடுமாறு துறை ஆணையருக்கு ஆணையிட்டுள்ளது. இது தொடர்பாக, மனுதாரரும், மேற்படி வள்ளலார் தெய்வநிலையத்தின் செயல் அலுவலரும், பண்ருட்டி சரக ஆய்வரும் சென்னை 34 நுங்கம்பாக்கம், உத்தமர் காந்தி சாலையில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அலுவலகத்தில் 14.09.2015 அன்று முற்பகல் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜாரகி மனுதாரர் கோரிக்கை தொடர்பான தத்தம் விளக்கங்களை வாக்குமூலங்களாக அளித்துள்ளனர். மேலும் விழுப்புரம் இணை ஆணையர் சமர்ப்பித்துள்ள அறிக்கையும் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் மனுவில் இவ்வறநிறுவனத்தின் அறங்காவலர்கள் இன்ன வகையில் இருக்க வேண்டும் என்ற தனது மூன்று வகை வேண்டுகோளை பரிசீலிக்க வேண்டுமென மட்டுமே தனது ரிட் மனுவில் கோரியுள்ளார் என்பதால், இம்மூன்று வகையான வேண்டுகோள் அடிப்படையில் அறங்காவலர்களை நியமிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரரின் 3 கோரிக்கைகளை, அவற்றுக்குப் பொருத்தமான இத்துறையின் சட்டப்பிரிவுகளின்படியும், ஒப்புவமையற்ற தனிப்பெறும் சிறப்புடைய திருஅருட்பிரகாச வள்ளலாராலேயே, எழுதப்பட்ட / வகுக்கப்பட்ட நெறி முறைகளுடனும், அவரால் உலகோருக்கு அருளப்பட்ட "அருட்பெருஞ்ஜோதி" வழிபாட்டிற்கு அவரால் ஸ்தாபிக்கப்பட்ட சத்திய ஞானசபை எனும் வழிபாட்டுத் தலத்தில் கடைப்பிடிக்க "வேண்டுமென" எழுதி வைக்கப்பட்ட "முறைமைகளைக்" கவனத்தில் கொண்டும், (வள்ளலார் தெய்வ நிலைய வெளியீடு திருவருட்பா உரைநடைப்பகுதி பக்கம் 551–ல் சபை வழிபாட்டு விதி 18.07.1872) கீழ்க்கண்டவாறு பரிசீலித்து பதில் அளிக்கப்படுகிறது:

**கோரிக்கை – 1**

"வடலூர், திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தின் ஐந்து அறங்காவலர்களில் மூன்று நபர்கள் "சுத்த சன்மார்க்கத்தை" சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்."

www.atruegod.org

Scanned with CamScanner

நடைபெறும் நிகழ்வுகளை அறிந்துகொண்டு வள்ளலாரின் கொள்கைகளை தாம் தொடர்ந்து பின்பற்றி வருவதற்காக சங்க உறுப்பினராக இருந்து வருகின்றனர்.

இச்சங்க உறுப்பினர்களில் எல்லோருடைய சுயதகவல்கள் மற்றும் நடவடிக்கைகளும் பதிவு செய்யப்பட்டு அறியும் நிலையில் இல்லை.

திருவருட்பா உரைநடைப்பகுதியில் (பக்கம் 553–ல் சன்மார்க்க சங்கத்தார் பழக்கவிதி 25.11.1872 (இணைப்பு–4) என்ற தலைப்பில் ) திரு அருட்பிரகாச வள்ளலார் அவர்களே சன்மார்க்க சங்கத்தாரின் ஒழுக்க நடைமுறைகளை விதித்துள்ளார். அதனை ஆழ்ந்து ஆராய்ந்தால் , சன்மார்க்கர் என்பவர் சன்மார்க்க சங்க உறுப்பினராக இவ்வறநிறுவனத்தில் பதிவு செய்தவர் மட்டும் அல்ல, சன்மார்க்க சங்க உறுப்பினர் அல்லாத மேற்சொன்ன ஒழுக்க நடைமுறைகளை கடைப்பிடிப்போரும் உள்ளனர் . ஆனால் இன்றைய வாழ்வியலில் மேற்குறிப்பிட்ட ஒழுக்க நெறிகளை ஒவ்வொருவரும் எவ்வாறு கடைபிடிக்கின்றனர் என்பதை மற்றொருவர் அறிந்துகொள்ளுதல் எளிதல்ல. அதுபோன்று உறுப்பினர்களாக சந்தா செலுத்திய அனைவருமே சன்மார்க்க சங்கத்தின் ஒழுக்க நெறிகளை கடைபிடிப்பவர் என்று முடிவெடுக்க இயலாது.

திருஅருட்பிரகாச வள்ளலாரே இன்றும் சன்மார்க்க சங்கத்தை நடத்துகின்றார் என்பது உலகெங்கும் உள்ள சன்மார்க்க அன்பர்களின் நம்பிக்கை. .

வள்ளற்பெருமானார் நிறுவிய சன்மார்க்க சங்கம் வள்ளலார் தெய்வ நிலையத்தால் நிர்வகிக்கப்பட்டுவருகிறது. பசலி 1424 வரை 10 ஆண்டுகளுக்குரிய சந்தா உறுப்பினர்கள் 4568 நபர்களும், ஆண்டு சந்தா உறுப்பினர்கள் 6000 நபர்களும் ஆக, மொத்தம் 10,568 சன்மார்க்க சங்க உறுப்பினர்கள் தற்போது உள்ளனர். இச்சங்க உறுப்பினர்களுக்கு வள்ளலார் தெய்வநிலையத்தில் நடைபெறும் அனைத்து விழாக்களின் அழைப்பிதழ் அனுப்பப்படுகிறது. இக்குறிப்புகளால் மனுதாரர் பரிந்துரைகளின்படி தற்போதைய சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் ஆயுட்கால சந்தாதாரர்களாக இருப்பது மட்டுமே அறங்காவலர் தகுதிக்குரிய அடிப்படை தகுதியாக நிர்ணயிப்பது அறங்காவலர் தகுதிகளை விரிந்த பார்வையோடு பரிசீலிப்பதைக் கட்டுப்படுத்தும். சன்மார்க்க சங்கத்தில் உறுப்பினரல்லாத பல்லாயிரம் நபர்களில் வள்ளலாரின் வழி நடப்போரும் இருப்பர். எனவே, அவர்களின் விருப்பத்தையும் வாய்ப்பையும், மறுப்பதாகவே அது அமையும்.

இவ்வகையில், சன்மார்க்க சங்கத்தில் ஆயுட்கால சந்தாரர்கள் இல்லை என்பதும், அச்சந்தாதாரர்கள் மட்டுமே அறங்காவலர்களாக வேண்டும் என்பது நல்ல தலைமையைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைக் கட்டுப்படுத்தும் என்பதையும் மனுதாரருக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

www.atruegod.org

Scanned with CamScanner

